செ.வெ.எண்: 26 / மார்ச் நாள்: 15.03.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## தேர்தல் பணியில் பயன்படுத்தப்படும் கண்காணிப்பு வாகனங்களுக்கு ஜி.பி.எஸ் கருவி பொருத்தும் பணிகளை

## மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன் இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று (15.03.2016) மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், தேர்தல் பணியில் உள்ள பறக்கும் படை வாகனம் மற்றும் நிலைத்த கண்காணிப்புக் குழு வாகனங்களை கண்காணித்திடும் வகையில் ஜி.பி.எஸ் கருவி பொருத்தப்படும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சட்டமன்ற பொதுத் தேர்தல் நாள் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இராமநாதபுரம் மாவட்டத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறையில் உள்ளன. தேர்தல் நடத்தை விதிமுறை மீறல்கள் மற்றும் முறைகேடுகளை கண்காணித்திடும் வகையில் மாவட்டத்திலுள்ள நான்கு சட்டமன்றத் தொகுதிகளிலும் தலா 3 பறக்கும்படை வாகனங்கள் வீதம் 12 வாகனங்களும் தலா 1 நிலைக் கண்காணிப்புக்குழு வாகனம் வீதம் 4 வாகனங்களும் ஆக மொத்தம் 16 வாகனங்கள் தேர்தல் பணியில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்திய தேர்தல் ஆணையம், இவ்வாகனங்களின் செயல்பாடுகளை கண்காணித்திட ஏதுவாக ஜி.பி.எஸ் கருவி பொருத்திட உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் தேர்தல் பணியில் பயன்படுத்தப்பட்டு வரும் 16 கண்காணிப்பு வாகனங்களுக்கு ஜி.பி.எஸ் கருவி பொருத்தும் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதன்பின்பு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பாக பொதுமக்களுக்கு வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் அமைக்கப்பட்டுள்ள வாக்காளர் விழிப்புணர்வு புகைப்படக்கண்காட்சியினை மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார். தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்பட்டு வரும் தேர்தல் கட்டுப்பாட்டு அறையினைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். தேர்தல் கட்டுப்பாட்டு அறையில் வைக்கப்பட்டுள்ள புகார் பதிவேட்டினை ஆய்வு செய்து தேர்தல் நேரத்தில் கட்டுப்பாட்டு அறையில் பணியாற்றும் அலுவலர்கள் மிகவும் விழிப்புடன் பணியாற்றிட வேண்டும் எனவும், தேர்தல் தொடர்பாக தேர்தல் கட்டுப்பாட்டு அறைக்கு வரும் புகார்களை உடனுக்குடன் புகார் பதிவேட்டில் பதிவு செய்து உடனடி நடவடிக்கை மேற்கொள்ள துரிதமாக பணியாற்றிட வேண்டும் எனவும் அறிவுரை வழங்கினார்.

இந்நிகழ்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எம்.அலி அக்பர், தேர்தல் வட்டாட்சியர் திரு.தர்மன் உட்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**
**புகைப்படம் : மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**